Arima Nokku

18:4 சனவரி 2025

# அரிமா நோக்கு

ISSN 2320-4842

ஆசிரியர்: ஈரோடு தமிழன்பன்



மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு, மெய்யியல், அறிவியல் சார் பன்பாட்டுக் காலாண்டிதழ்

INTERNATIONAL QUARTERLY ON LANGUAGE, LITERATURE, ART CULTURE, PHILOSOPHY AND SCIENCE

பல்கலைக்கழக நல்கை ஆணையத்தின் ஏற்பிணைப் பெற்ற ஆய்விதழ்

UGC - CARE LISTED AND PEER REVIEWED JOURNAL

https://arimanokku.com

UGC - CARE LISTED AND PEER REVIEWED JOURNAL ISSN 2320-4842

அரிமா நோக்கு
ISSN: 2320 - 4842

அரிமா நோக்கு
18:4 சனவரி 2025

ஆசிரியர்
இரா. பன்னிருகைவடிவேலன்

ஆசிரியர் குழு
நா. கணேசன் (அமெரிக்கா)
நா. சுப்பிரமணியன் (கனடா)
பொன். செல்வகணபதி
ஒப்பிலா மதிவாணன்
சீதாலட்சுமி (சிங்கப்பூர்)
மு. பரமசிவம் (மலேசியா)
அப்பாசாமி முருகையன் (பிரான்ஸ்)
மனோன்மணி தேவி (மலேசியா)
டத்மாவதி விவேகானந்தன்
மருதூர் அரங்கராசன்
பெ. இலக்குமிநாராயணன்
கோ. பழனி
மு. வையாபுரி
சி. சிதம்பரம்
பா. விஜயகுமார்
ஹெப்சி ரோஸ் மேரி
ச. திருநாவுக்கரசு
ப. குமார்
கி. துர்காதேவி
தே. ராஜகுமார்
த. பாலமுருகன்

அறிவுரைக் குழு
இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் உள்ள தமிழியல் அறிஞர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் படைப்பாளிகள்

பதிப்பாசிரியர்
இரா. பன்னிருகைவடிவேலன்
+91 91766 30415

# பொருளடக்கம் CONTENTS

சங்ககாலத் திணை விளைவித்தலும் சூழலமைவும் - சு. திலகவதி 04
சிறுவர் இதழ்கள் ஆய்வு - பெ. பவானி
சூல் நாவல் காட்டும் உருளக்குடி மக்கள் வாழ்வியல் 11
முனைவர் த. வசந்தாள்
தேசிங்கு ராஜன் கதைப்பாடலில் : வாய்பாடு - அ. வினிதா 19
இனக்குழு மக்களின் நம்பிக்கை - மகிமைப் பொருள்கள் 32
மானிடவியல் அணுகுமுறை - க. விஜயகுமாரி
மாடு சார்ந்த மருந்து மருத்துவம் 36
கு. வெருதராஜ் - முனைவர் செ. இளையராஜா
மூங்கிலரிசி வெடிக்கும் பருவம் கவிதைகளில் பெண்கள் 40
ச. நாகராஜன் - முனைவர் ப. கண்ணுமுத்து
தமிழர் பண்பாட்டில் கிராமிய வழக்காறுகள் 49
சி. விநாயக மூர்த்தி
வேலராமமூர்த்தியின் அரியநாச்சி நாவல் வெளிப்படுத்தும் 51
குடும்பஅமைப்பு முறைகளும் சிக்கல்களும்
சி. ஜெயப்பிரகாஷ் - முனைவர் இரா. விஷ்ணுப்பிரியா
தமிழிலக்கிய வகைமையில் தலபுராணங்கள் - செ. யுவஸ்ரீ 54
ஆனைமலை வட்டார நாட்டுப்புற மருத்துவம்: பெண்கள் 58
மா. செந்தில் குமார், முனைவர் வெ. பன்னீர் செல்வம்
சிலப்பதிகாரமும் கண்ணகி வழக்குரைக் காப்பியமும் 62
முனைவர் அ. மகபூபூ
இயற்கை நோக்கில் தமிழர்சால்பு - முனைவர் கி. ராம்கணேஷ் 66
தமிழ் இணைய இதழ்களின் வகைப்பாடும், சிறப்புகளும் 71
முனைவர் ந. ஞானமணி
இலக்கிய வகைமை நோக்கில் பழனித் திருவாயிரம் 74
முனைவர் ந. அரவிந்த்குமார்
சங்க மாந்தரின் காலக் கணிப்பான் 78
முனைவர் பா. ஷியாமளாதேவி
சூழலியல் நோக்கில் சங்கத் தமிழரின் நீர் மேலாண்மை 83
முனைவர் மா. கார்த்திகேயன்
தேவாரம் சுட்டும் திருக்கோயில்கள்-முனைவர் இரா.வனிதாமணி 86
திருத்தக்கத் தேவர் பார்வையில் அமைச்சர் - முனைவர் க. ர. லதா 89
உளவியல் நோக்கில் சிவப்பிரகாசப் பாடலில் 93
தனிமனித மனநிலையும் சமூகமும் - முனைவர் ர. நித்யா
வாய்மொழி மரபில் மகாபாரதப் பிரசங்க மரபு 96
முனைவர் மு. ஏழுமலை
தலவிருட்சங்களின் தோற்றப் பின்புலமும் மருத்துவ கூறுகளும் 100
(திருஞானசம்பந்தர் பதிகங்கள்)-முனைவர் த.பரமேசுவரி
சங்கத் தமிழர் வணிகமும் வாழ்வியலும் 107
முனைவர் தே. ராஜகுமார்
திருமூலர் காட்டும் அன்பு நெறி - முனைவர் ப. கார்த்திக் 112
பிரபஞ்சன் நாவல்களில் சமூகம் - முனைவர் ச. இராஜலதா 119
உயிர்க்கோட்பாடு - உலகாயிதத்தில் உயிர் 121
முனைவர் த. பாலமுருகன்
சமயம் வளர்த்த பெண்களின் உள்ளத்து உணர்வுகள் 125
முனைவர் சி. கவிதா
தேனி, திண்டுக்கல் வட்டாரத்தில் அஞ்சரைப்பெட்டி மருந்துவம் 128
ப. கனகவள்ளி - முனைவர் தே. ராஜசீலி 131

# சிலப்பதிகாரமும் கண்ணகி வழக்குரைக் காப்பியமும்

முனைவர் அ. மதுபூ
உதவிப்பேராசிரியை, என்.ஜி.எம்.கல்லூரி
பொள்ளாச்சி, 642001

## முன்னுரை

தனித்தமிழில் எழுந்த முதல் காப்பியம் சிலம்பு. உலகக் காப்பியங்கள் கடவுளர்களையோ முடி மன்னர்களையோ பாடிக் கொண்டிருந்த காலத்தில் குடி மக்களைப் பாடியது சிலம்பின் சிறப்புகளில் தலையாயது. உண்மையாக நடந்த கதை, நாட்டு மக்களிடையே பல்வேறு மாற்றங்களைப் பெற்று உலாவி வந்ததைக் கண்ட இளங்கோவடிகள் அக்காலச் சமுதாய மாற்றத்திற்கு ஏற்றகளமாக இக்கதையைத் தெரிவு செய்ததுடன் தம் நோக்கத்திற்கேற்ப பல மாற்றங்களைச் செய்து சிலைபுக காப்பியத்தை இயற்றினார். இக்காப்பியம் மக்கள் மன்றத்திற்கு வருமுன்பே மக்களிடம் வழங்கிய கண்ணகி கதை தமிழகம், கேரளம், ஈழம், சிங்களம், வடபுலம் என்று பல்வேறு இடங்களிலும் காலச்சூழல், செழித்தோங்கிய சமயம் இவற்றுக்கேற்ப பல மாற்றங்களைக் கொண்டு உலகமொழிகளில் பரவியிருந்தது. குறிபிடத்தக்கது. ஆவற்றில் சிரப்பதிகாரக் கதையை ஈழம் கண்ணகி வழக்குரைக் காப்பியத்துடன் ஒப்பிட்டு ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## இளங்கோவடிகளின் சிலப்பதிகாரம் (கதைச்சுருக்கம்)

சிலப்பதிகாரம் மூன்று காண்டங்களையும், முப்பது காதைகளையும் கொண்டது. மலைவளம் காணச்சென்றிருந்த சேரன் செங்குட்டுவனிடம் மலைவாழ் மக்கள் (குறவர்) தான் கண்ட நிகழ்ச்சியை எடுத்துரைத்த போது சாத்தனார் அருகிருந்தமையால் சங்கத்து அரங்கேற்றுதலின்றி 'இளங்கோ வடிகள் கூறச் சாத்தனார் கேட்டார்' என வருவதனால் கடைச்சங்க காலத்துக்குப் பிறபட்ட நூல எனக் கூறலாம். குன்றக் குறவர் கண்ட செய்தியையும், கதைச்சுருக்கத்தையும் பதிகத்தில தொன்னூறு பாடல்களில் விளக்கப்பட்டுள்ளது. சான்றாக, **"குணவாயிற் கோட்டத் தரசு துறந்திருந்த" (சிலம்பு: பதி:1-90)** சிலப்பதிகாரம் ந.மு. வேங்கடசாமி நாட்டார். (சிலப்பதிகார பதிகம் 1-90, பக். 23,26) என்ற பாடல்வரிகளில் மூலம் கதை தொடங்குகிறது. இளங்கோவடிகள் கேட்க கண்ணகியின் வரலாற்றைச் சாத்தனார் கூற, அதுவே சிலப்பதிகாரம் படைக்கத் தூண்டுகோலாக அமைந்தது என்பதை மூலநூலிலுள்ள பதிகச் செய்தியின் வாயிலாக உணர முடிகிறது.

## சாத்தனாரின் விளக்கம்

'கோவலன்' என்னுமோர் வாணிகன் இருந்தான். நாடகக் கலையே ஒருங்கு போற்றும் நாடகக் கணிகை ஒருத்தியுடன் அவன் ஆடிய ஆட்டத்தினால், தனக்குரியவான அரிய செல்வம் அனைத்தையும் இழந்தான். அவன் மனைவி 'கண்ணகி என்பவள் இசை முழங்கும் இரு காற்சிலம்புகளை முடிவில் அவளிடம் எஞ்சியிருந்தன. அவற்றை விற்றுப் பொருள் பெருவதற்கு விரும்பிய அவன், பாண்டியனின் தலைநகரான மதுரையை அவளுடன் சென்று அடைந்தனன் கோவலன் அச்சிலம்புகளுள் ஒன்றைத் தன் கையிலே எடுத்துக்கொண்டு விற்றுவரப் புறப்பட்டான். அதனைக் கையிலே வாங்கிப்பார்த்த பொற்கொல்லனுக்கு, தான் முன்னர்க் களவாடிக்கொண்ட அரசியின் காற்சிலம்பு நினைவுக்கு வந்தது. ஏதோ திட்டமிட்டவனாகக் கோவலனிடம் 'கோப்பெருந் தேவியாருக்கு அன்றி இவ்வூரினருள் வேறு ஒருவராலும் வாங்கி அணியும் தகுதி உடையதன்று இச்சிலம்பு 'இங்கேயே நீவிர் இருப்பீராக, யான் அரண்மனைக்குச் சென்று கேட்டு வருகின்றேன் என்று கூறி இருக்க வைத்துவிட்டுச் சென்றான். பாண்டியனைக் கண்டு 'நம் அரசியின் நுண்ணமைப்பான வேலைப்பாடமைந்த காற்சிலம்பினை, ஒரு அயலானின் கையியே கண்டேன் என்றான் வினையின் பயன் வந்து விளையும் காலம் வந்துவிட்டது.' அதனால் மேப்பந்தாரோனான பாண்டியன்

மேற்கொண்டு எதுவும் ஆராய்ந்து தெளியாதவனாயினார். அனுபவம் முதிர்ந்த தன் காவலரைக் கூவி. 'இதோ இவன் காட்டும் அக்கள்வனைக் கொன்று. அச்சிலம்பினை இவ்விடம் கொணர் விராக' என்றும் ஏவினான். அவ் ஏவலின்படியே கோவலன் காவலரால் கொலையுண்டு மாண்டான். அவன் மனைவியோ, தனக்கொரு புகலிடம் ஏதும் காணாமல் துடித்தாள் நெடுங்கண் நீர்வாய அழுதாள். அவள் பத்தினியாதலால் அத்துடனும் அமையவில்லை பாண்டியனையும் அழியச் செய்தாள் முத்தாரம் தவழும் மார்பின் முலை முகத்தைத் திருகி எறிந்து மதுரை நகரினையும் நெருப்பிலும் தீக்கு இரையாக்கினாள். அழிவின்றி என்றும் நிலைபெற்று விளங்கிய மதுரையும் அவளால் அன்று தீவாய்ப்பட்டது. அவள் செயலைக் கண்ட பலரும். அவளைப் 'பத்தினி'யெனப் போற்றினர். கூறவர்கண்டவர் அவளோயாவள்' என்றார் சாத்தனார். 'வினையின் பயன்வந்து விளைகின்ற காலம் என்றீரே. அவர்களின் வினை விளைவுகள் தாம் என்னவோ? என்று இளங்கோவடிகள் மீண்டும் சாத்தனாரைக் கேட்க கதை மீண்டும் முற்பிறவியிலிருந்து தொடர்கிறது.

## வினையின் விளைவு முற்பிறவிக் கதை

ஆற்றல் உடையவரே கேட்பீராக நள்ளிருள் யாமத்திலே யானும் ஒருநாள் படுத்துக்கிடந்தேன். அப்போது ஆறாத்துயரங்கொண்ட வீரபத்தினியின் முன்னர். மதுரைமா தெய்வம் வந்து தோன்றியது. 'கோதிக்கும் குக்கேடு விளைவித்தவளே! பைந் தொடியே! முதிர்ந்த வினையின் பயனாலேயே உங்களுக்கு இப்படி எல்லாம் வந்து முடிந்தது. அதனால், முற்பிறப்பில், சிறந்த வண்புகழ் சிங்கபுரத்துச் சங்கமன் என்னும் வாணிகனின் மனைவி நீலி நின் கணவனுக்கு இட்ட சாபமும் வந்து பிணித்துக் கொண்டது. நீண்டு அடந்த கூந்தலுடையவளே அதனால் நீ மணந்து கொண்டவனை. இங்குள்ளவர் போலும் மனித வடிவிலே இனிக்காண்பது என்பது இயலாது. இன்றைக்குப் பதினான்காம் நாள். பகற்பொழுது முடியும் தருவாயில் வானவர்களின் வடிவிலே அவனைக் காண்பாய்' என்று கூறியது. கோணுதலற்ற அக்கட்டுரையினை அந்நள்ளிருள் யாமத்திலேயானும் என் காதாரக் கேட்டேன் என்றார்.' சாத்தனார். (சிலப்பதிகாரம்- புலியூரக் கேசிகன்: பக்.1-5) இவ்வாறாக பதிகத்தில் பாடல் களில் கதை உருவான வரலாறு கூறப் பட்டுள்ளது. மேலும் முப்பது காதைகளில் வரும் செய்திகளை சுருக்கமாகச் சொல்லப்பட்டுள்ளது.

## கண்ணகி வழக்குரை (ஈழம்)

இளங்கோவடிகள் தம் நூலுக்குக் கண்ணகியின் காற்சிலம்பை ஒட்டிச் சிலப்பதிகாரமெனப் பெயர் அமைத்தார். கண்ணகியின் பெயராலோ. விலை மதிப்பறியாத அவளின் சிலம்பின் பெயராலோ. அன்றி பாண்டிய மன்னனுடன் தொடுத்த வழக்கின் பெயராலே இக்கண்ணகி வழக்குரை காவியம் எழுத்துள்ளது. இக்காவியமானது 1.வரம் பெறும் காதை, 2.கப்பல் வைத்த காதை, 3.கடலோட்டுக் காதை, 4.கலியாணக்காதை, 5.மாதவி அரங்கேற்றுக்காதை, 6.பொன்னுக்கு மறிப்புக்காதை, 7.வழிநடைக்காதை, 8.அடைக் கலக்காதை, 9.கொலைக்கலக் காதை, 10.வழக்குரைக் காதை, 11.குளிர்ச்சிக் காதை. எனப் பதினோரு காதைகளாகப் பகுக்கப் பட்டுள்ளது.

## நூலாசிரியர்

இந்நூலாசிரியர் யாதென்பது தெரியவில்லை. எனினும் இவர் மட்டக்களப்பின் இருவகை வழக்கி னையும் நன்குணர்ந்த ஒரு நூலாசிரியராகக் காணப்படுகிறார். நூலின் இடையில் காங்கேயன் என்னும் பெயர் காணப்படுவது கொண்டு இவர் அடியார்க்கு நல்லார் காலத்தில் வாழ்ந்தவர் என்பதை அறியமுடிகிறது. இது குறித்து ஆய்வாளர் த.மேகராசா கூறுகையில் "எவ்.எக்ஸ். சி. நடராசா மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள செட்டிபாளையம் கண்ணகியம்மன் ஆலயத்தில் காணப்பட்ட ஏட்டிலுள்ள பாடல்களைச்சான்று காட்டி இந்நூல் கி.பி14-ம் நூற்றாண்டுக்குரிய தென்பர் (nadaraja-1989) என்கிறார். இந்நூலின் காலத்தை கூறுகையில் ஆய்வாளர்களிடை கருத்து முரண்பாடுகள் உள்ளன. சிலப்பதிகாரம் தலைவன் பெயரைக் கோவலன் சுட்டிச் செல்ல ஈழக்கதை கோவலனார் என்று உயர்வுப்பன்மை விகுதி சேர்த்துக் கூறுகிறது. இவன் இறப்பை கோவலனார் பிறந்த கதை என்றும் கண்ணகியை 'கண்ணகை' என்று சுட்டப்படுகிறது. அவள் பிறப்பை 'அம்மன் பிறந்தகதை என்றே வழக்குரை கூறுகிறது.

## கண்ணகை பிறப்பு (அம்மன் பிறந்த கதை)

கண்ணகியின் பிறப்பைக் கூறும்பொழுது அக்காலத்தில் பாண்டியன் சிவனைப் போன்றே நெற்றிக் கண்ணுடன் விளங்கிச் சிறப்புப் பெற்றிருந்தான். இதனைப் பொறுக்காத உமை, பாண்டியனின் நெற்றிக் கண் நீங்கச் சிவனை வேண்டினாள். பாண்டியநாட்டில் பதுமைக் கனி வடிவத்தில் பரராச முனிவரின் மகள்

தோன்றினாள். அதனைப் பறிக்க முயன்றோரின் கைக்கு எட்டாமல் பாண்டியனின் கைக்கு அது அகப்படுகிறது. கையில் விழுந்த கனி அக்கினி உருண்டையாகச் சுட்டது. அதனால் கனியை நிலத்தில் விட்டு அந்தக் கையால் நெற்றி வியர்வையைத் துடைக்க நெற்றிக் கண் மறைந்தது. நெருப்புருண்டை பின் கனியானது மன்னவன் கனியைத் தேவியிடம் கொடுக்க அவள் அதைப் பொற்குடத்தில் இட்டாள். மூன்றாம் நாள் அக்கினி கனி குழந்தையா யிருந்தது. மன்னன் வியப்பும் பயமும் சூழச் சோதிடரை அழைத்துக் கேட்டான். **"துன்று புகழ்க் கூடல் மன்னா" (அம் -7)** என்று சோதிடர்கள் கூற்றின்படி ஒரு பேழையுள்வைத்துக் கடலுள் இட்டான் மன்னன். காவிரிப்பூம்பட்டினத்துள் உலாவிக்கொண்டிருந்த மானாகன் (மாநாய்கன்) பேழையைக் கண்டு குழந்தையை எடுத்து வளர்த்தான். இக்கதை சிலப்பதிகாரம், கோவலன் கதை இரண்டும் சேர்ந்த கதையாக அமைந்தாலும் இச்செய்தி இரண்டிலும் சொல்லப்படாத புதிய செய்தியாகவும் அமைகிறது.

## மாணிக்கப்பரல் கதை

கண்ணகி பாண்டியனை வெற்றி பெறுவதற்குத் துணையாக இருந்தது மாணிக்கப்பரல்கள் கொண்ட சிலம்பு இதைச் சிலப்பதிகாரம், **"என்காற் பொற்சிலம்பு மணியுடை அரியே, (சிலம்பு-வழக்:67-69)** என இரு சிலம்பின் வேற்றுமை கூறுகிறது. மேலும் கண்ணகி சிலம்புடன் பிறந்ததாகவும் அதில் ஐந்துதலை நாகம் நாகமணியை பதித்ததாகவும் அமைவது (கோவலன் கதை). ஆனால் கண்ணகி வழக்குரைக் காதையில் வேறு மாதிரியாக அமைகிறது. மணப்பருவம் உற்ற தன் மகளுக்கு விலையுயர்ந்த அணிகலன்களைச் செய்த மானாகன் மற்றையோரால் பெற முடியாத நாகமணியைக் காற்சிலம்பினுள் இட விரும்புகிறான். (காமன் கதை: 22-24) சோழநாட்டின் தெற்குப் பகுதியில் நாகமணியைப் பெறுகிறான். இந்நாகமணியைப் பெற்றதற்கான அருமையையோ அதைப் பெறுவதற்கு எடுத்த முயற்சிகளையோ இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் குறிப்பிடவில்லை.

## கல்யாணம் வைத்த காதை - மாதவி அரங்கேற்றுக் காதை

சிலம்பில் மங்கல வாழ்த்துக் காதையில் திருமணச் சடங்கு சுருக்கமாகவே கூறப்படுகிறது. ஆனால் வழக்குரை ஆசிரியர் கோவலனார் கண்ணகி கல்யாணத்தை 64 பாடல்களில் கூறுகிறார். இளங்கோவடிகள் திருமணம் முடிந்த கண்ணகி, கோவலனைமனையறம்படுத்தி ஆண்டு கள் சில கழிந்த பிறகே மாதவியை அறிமுகப் படுத்துகிறார். ஆனால் வழக்குரையாசிரியர் திருமணச் சடங்கு நடந்து கொண்டிருந்த நான்காம் நாளிலேயே கோவலன் கண்ணகியைப் பிரிவதாகக்காட்டுகிறார். கண்ணகியை அரசியின் அம்சமாகக் காட்டுவதால் இவ்வாறு கூறுகிறார் போலும்.

## பொன்னுக்கு மறிப்புக்காதை

சிலம்பில் கோவலனுக்கும் மாதவிக்கும் அமைந்த ஏற்பட்ட ஐயமே பிரிவுக்குக் காரணமாகிறது. வழக்குரையில் அரைமாப் பொன் குறைவே பிரிவுக்குக் காரணமாகிறது. சிலம்பில் சித்திராபதி பாத்திரப்படைப்ப காணப்படவில்லை. அவளதாய் கோவலன் மாதவியின் பிரிவிற்குக் காரணமாகிறாள். மாதவி கோவலனின்றி வாழா நிலையையும் மனைவியென்றே வாழ்ந்த நிலையையும் புலப்படுத்துகிறது. அதனால் அரைமாப்பொன் குறைந்ததனால் கோவலனை நீங்கும்படி கூறிய தாயை நோக்கிப் "பாவி மாதாவே இரங்காதோ உன்னது" என்று கடியும் போக்கும் (பாடலவரி 46) காணப்படுகிறது. மாதவியின் நிலையை கூறும் பொழுது "கோவலன் இல்லாமல் முதுமையெய்தினாலும் எய்துவேன் வேறொருவரை அணையேன்" என்று மாதவியின் உறுதி எடுத்துரைக்கப்படுகிறது.

## வயந்தமாலை தூது - வழிநடைக் காதை

சிலப்பதிகாரத்தைப் போன்றே கண்ணகி வழக்குரையிலும் வயந்தமாலை தூது காணப்படுகிறது. வயந்தமாலை தூது மட்டும் 170 பாடல்களில் காட்டுப்படுகிறது. சிலப்பதிகாரம் வயந்தமாலையை ஒருமுறை மட்டுமே தூதுவிட்டதாகக் கூற - கண்ணகி வழக்குரை அவளை இருமுறை தூதுவிட்டதாகக் கூறுகிறது. சிலம்பில் கோவலன் மாதவியின் கடிதத்தைத் திறந்துபாரான். வழக்குரை நூலில் கோவலனார் மடலைத் திறந்து பார்த்து வயந்தமாலையுடன் வாக்குவாதமும் நிகழ்த்துகிறான். "இருமபுண்ட நீரினும் யானங்கு வாரேன் காண்" என முடிவாகக் கூறுகிறான். சிலப்பு விரும்பாடி கண்ணகையை கூறுவதும், கோவலனார் மறுப்பதும் இளங்கோவடிகள் கூறாத பகுதியாகும். சிலம்பில் எதிர்வாதம் இல்லாமலிருக்க இங்கு இருவரும் வாதம் புரிகின்றனர் (171-238) மாதவியாரை விட்டுக் கோவலன் திரும்பி வந்தவுடனேயே கண்ணகை

"பசித்தவர்கள் ஏது தின்னார்" பகைத்தவர்கள் ஏது தின்னார். பகைத்தவர்கள் ஏது சொல்வார்" என்ற உலகியலைக் கூறி விஷத்தரவின் மணிச்சிலம்பை விற்றுவரும்படி கூறுகிறார் (171). சிலம்பு கண்ணகி மாதவியின் பெயரைக்கூட எந்தவிடத்தும் சுட்டவில்லை. இக்கண்ணகை, கோவலனாரின் பரத்தமையைக் குறிப்பிடுகின் றாள். இருவரும் போகும்போது துர்ச்சகுணங்கள் தோன்றுகின்றன.

## அடைக்கலக்காதை - கொலைக்களக் காதை

இளங்கோவடிகள் கவுந்தி என்னும் புதிய பாத்திரத்தைப் படைத்ததால், அத்துறவி மாதரியி டம் கண்ணகியின் பெருமையைக் கூறி அடைக்கலப்படுத்துவதாகக் காட்டப்படுகிறது. 'கண்ணகி வழக்குரையில் கவுந்தி இடம்பெறாத தால் வழியில் செல்லும் இவர்களைக் கண்டு மாதரியே வியந்து பாதுகாக்க உறுதி கொள்கிறாள்.

சிலம்பை விற்க முடியாத கோவலனார், சோதிடம் பார்க்கிறான். சிப்பதிகாரத்தில் இருப்பது போன்றே இதிலும் பொற்கொல்லன் அமைகிறான். சிலப்பில் பாண்டிய மன்னர் கோவலனைக் காணாமலேயே "சிலம்பு அக்கள் வன் கையதாகில் கொன்று அச்சிலம்பு கொணர்க" என்று ஆணையிடுகிறான். கண்ணகி வழக்குரையில் பாண்டியனுக்கும் கோவலனுக் கும் உரையாடல் நிகழ்கிறது (93-97). தட்டான் கோப்பெருந்தேவியிடம் சிலம்பினைக் கொண்டு சென்று அவளுடையதா? என்று வினவுகிறான். இதனால் கோபமுற்ற கோப்பெருந்தேவி 'பொய் சொல்லல் ஆகாது' என்று கூறி இச்சிலம்பு தன்னுடையதல்ல என்று உண்மை கூறுகிறாள். கோவலனார் திருடிய சிலம்பைக் கைப்பற்றி விட்டதால் அவனைக் கொலை செய்தல் தேவையில்லை. விடுதலை செய்து விடலாம் என்று பாண்டியன் கூறுகிறான். ஆனால் தட்டானோ கள்வனைக் கொல்லாது விடின் நீதியே நிலவாது என்று கூறுகிறான். மன்னனும் சம்மதித்து மதயானை முன் இட்டுக்கொல்ல ஆணையிடுகிறான். யானைக்கு மதம் பிடிக்க வைக்கின்றனர். கோவலனார் முன்னர் நின்ற யானை அவனைக்கொல்லாது நிற்கிறது. பொற் கொல்லன் "இவன் காவிரிப்பூம் பட்டினத்தில் மாந்திரிகம் கற்றவன். ஆகவே மழுவால் வெட்டியே கொல்லவேண்டும் என்று கூற கோவனாரைக் கொல்வதற்கு மழுவரசன் மாலகன் என்பவனை ஏற்பாடு செய்கின்றான். மழுவரசன் மாலகனுக்கு பல துர்நிமித்தங்கள் தோன்றுகின்றன. அவன் கோவலனாரைத் தப்பிப் போகுமாறு வேண்டுகிறான். கோவலனார் மறுத்து விட மழுவரசன் கோவலனைக் கொல்கிறான். "**சேற்றிக் கிடந்ததொரு செங்கழுநீர்ப் பூப்போலக் (கொ:176-178)** என்று கோவலனின் நிலை கூறப்படுகின்றது. ஆயர்பாடியில் கண்ணகி கனவு கண்டதாகச் சிலம்பு கூறவில்லை. 'கண்ணகி வழக்குரையில்' கண்ணகையர் மூன்று முறை கனவு கண்டதைக் கூறுகிறது இப்பகுதி முழுவதும் கதை ஒன்று என்றாலும் நிகழ்வுகள் முழுவதும் மாறுபடுகிறது. கண்ணகி வழக்குரை யில் அம்மனே கண்ணகையாக வந்து பிறப்பதால் கை நீட்டியவுடன் ஊசி வந்து தைப்பதும் இயல்பாகிறது. கோவலன் உயிர்பெறும் முறை புதுமையாக உள்ளது. கண்ணகை கோவலனாரைத் தேவகிரிக்கும் போகச் சொல்கிறாள். தான் தேவகிரிக்கு வந்து கணவனைக் கூடுவதாகக் கூறுகிறாள். ஆனால் கண்ணகி மதுரையை எரித்த பிறகு ஆயர்பாடிக்குச் செல்கிறாள். மனம் குளிர்கிறாள். ஆனால் கணவனைக் கூடியதாகக் காட்ட வில்லை. உயிர்பெற்ற கோவலனார் தீவினை நினைத்து புலம்புதல் சிலம்பு கூறாதது. கோவலனின் உயிர் மீண்டும் பிரிந்தவுடன் கண்ணகைக்குச் சினமெழுதல் மனித இயல்பாகச் சிலம்பு காட்டுகிறது. ஆனால் வழக்குரையில் வாழ்த்துவதாக அமைந்தது குறிப்பிடத்தக்கது.

## வழக்குரைத்த காதை

சிலப்பதிகாரத்தில் போன்றே வழக்குரையிலும் பாண்டிமாதேவி கனவு காண்பதாகக் கூறப்படு கிறது. ஆனால் கண்ட கனவுதான் மாறுபடுகிறது. கண்ணகை அவைக்குள் நுழைந்ததும் அங்கி ருந்த மறையவர்க்கும், மன்னவர்க்கும், வணிகரு க்கும், காப்பாளருக்கும் அபாயமென்கிறாள். அவள் புகாரின் சிறப்பை 16 பாடல்களில் கூறுகிறாள். நாகமணியின் பெருமையைக் கூறுகிறாள். "வேலி பயிர்தனை அழித்தால் விளையுமோடா, மன்னவனே?" என மதிப்புக் குறைவாகக் கேட்கிறாள். இதனால் வெகுண்ட மன்னவன் தன் பெருமையைக் கூறி "மெல்லி யலாள் என்றதால் உனை விட்டேன்" என்று கூறுகிறான். சிலம்பில் கண்ணகி தன் கணவன் கள்வனா எனக் காய்கதிர்வனிடம் கேட்கிறாள் (துன். 50-53). அவளுக்குக் கதிரவன் மறுமொழி கூறுகிறான். வழக்குரை கண்ணகை சிவனிடம் கேட்கிறாள். அவன் மறுமொழி கூறவில்லை. திருடப்பட்ட தன் சிலம்பைச் சபைக்குக் கொண்டு வரச் சொல்கிறாள் கண்ணகை. அங்கிருந்த

மந்திரிகள் அவ நோக்கிச் சிலம்பு உன்னுடைய தானால் நீயே அதனை அழைக்கலாமே என்கின்றனர். கண்ணகை ஈசனை நினைத்து நான்குமுறை தன் சிலம்பைக்கூவி அழைத்ததுமே, "மாணிக்கப் பெட்டியிலே வைத்திருக்கும் பொற் சிலம்பு" (வழ:200) கண்ணகையின் முன்னிலையில் வந்து கரத்தில் ஏறுகிறது. இச்செய்தி சிலப்பதிகாரத்தில் இல்லை. பாண்டிமாதேவி பதைத்து ஒடிவந்துபத்தினி பாதத்திலே மெத்தென விழுந்து கண்ணகை யிடம் "மண்ணாளும் பாண்டியனை மடிப்பிச்சை" வேண்டுகிறாள். கண்ணகை வெகுண்டு சிலம்பைத் தூண் ஒன்றில் மோதுகிறாள். மாணிக்கப்பரல் பட்டு மன்னவன் இறக்கிறான். இவ்வாறாக வழக்குரைக் காதை அமைகிறது.

## குளிர்ச்சிக் காதை

மதுரையை எரித்த பிறகு கண்ணகி சேரநாடு சென்று பத்தினித் தெய்வமானாள் என்று சிலம்பு கூறுகிறது. கண்ணகையாரோ மதுரையை எரியூட்டிய பின் இடையர் சேரியில் சேர்ந்தனள். அங்கிருந்த இடைச்சியர் வெண்ணெய் கொண்டு அவளுடைய முலையில் அப்புகின்றனர். பறைச்சியர் சிலர் பஞ்சு கொண்டு அப்புகின்றனர். கண்ணகை இடைச்சேரியிலும், பறைச்சேரியிலும் தீ புகாதொழிக என அருள் புரிகிறாள். தீமிதியென மழைபொழியத் தேசமெல்லாம் மிசத்தழைக்க என்று இடைக்குல மாதர்கள் மழைக்காகக் கண்ணகையை வேண்டுகின்றாள். மகளிர் வேண்டியதால் மழைபொழிந்ததாகவும் கூறப்படுகிறது. கண்ணகி கோவலனுடன் சேர்ந்து தேவருலகம் சென்றதாகக் கூறுகிறது. இத்துடன் நிகழ்ச்சி முடிந்தாலும் கதை தொடர்கிறது. கண்ணகை அம்மானை ஆடியதாக ஒன்பது பாடல்கள் கூறுகின்றன. மாதரி தூய நெய் நூறுகுடம் கொங்கையில் அப்பிய பிறகே கண்ணகியின் சினம் ஆறியது. அப்போது அங்கு சீத்தலைச் சாத்தனார் வந்து "சினம் ஆறுக" என்று வேண்டினார். "நீ வரும் திங்களைக் கூறுக" என்று கேட்க வைகாசி திங்களில் வருவேன் என்று கண்ணகை பதில் கூறினாள். வைகாசி மாதம் பூரனை நாளில் காரைத்தீவு முதலான சில ஊர்களில் கண்ணகை அம்மன் கோயில்களில் வைகாசி மாதப் பூரனையோடு அல்லது பூரணையை அடுத்து வருகின்ற திங்கட்கிழமைகளில் குளுத்திப் பூசை நடைபெறுகிறது குறிப்பிடத்தக்கது. இந்நூல் ஆசிரியர், பாடினோர், படித்தோ கேட்டோர், அனைவரும் பிணி நீங்கி எக்காலமும் வாழ்க என்று வேண்டும் முறை பொதுமையாக அஃறிணை உயிர்களும் நோய் பிணி நீங்கி வாழ்ந்திட வேண்டுகிறார் ஆசிரியர். இந்நூலை படித்தவர்கள் அடையும் பயனையும் ஆசிரியர் கூறுகையில், "ஆல்போல் தழைத்து அறுகுபோல வேரூன்றி" (குளிர்ச்சி-86) என்று நூற்பயனைக் கூறுமுகத்தான் தெய்வமான கண்ணகையைத் தொழ வேண்டியதின் இன்றியமையாமையை ஆசிரியர் தெளிவுறுத்துவதாக கண்ணகை வழக்குரைக் காப்பியம் அமைந்துள்ளதை உணர முடிகிறது.

## முடிவுரை

இவ்வாறாக சிலப்பதிகாரமும் கண்ணகி வழக்குரைக் காப்பியமும் ஒற்றுமை வேற்றுமையுடன் காணப்படுவதன் மூலம் இரு காப்பியமும் அந்தந்த இடங்களுக்கும் சமூகத்திற்கும் ஏற்றபடி மாறுபட்டு இருப்பதை உணரமுடிகிறது.

## துணைநூற் பட்டியல்


1. த.மேகராசா, கண்ணகி வழக்குரைக் காப்பியமும் தமிழ்ச் சமூகத்தின் சமய சாதிய ஆதிக்கமும், இந்தியன் ஜெனல் ஆப் தமிழ் (பக்- 2) தொகுதி-4 2023.
2. ந.மு.வேங்கடசாமி நாட்டார், சிலப்பதிகாரம், ராமையா பதிப்பகம், ஜீ-4.சாந்தி அடுக்ககம் ஸ்ரீ கிருஷ்ணாபுரம் தெரு, ராயப்பேட்டை - சென்னை - 600 014, மு.ப : 2008.
3. கந்தையர் வி.சி, கண்ணகி வழக்குரை, காரைத்தீவு, இந்துசமய விருத்திச்சங்கம், இலங்கை - 1968.
4. பாலசுப்பரமணியன் கு.மு. நற்றிணை, நியு செஞ்சுரி புக்ஹவுஸ்(பி) லிட், 41 பி சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், ஆம்பத்தூர், சென்னை - 600 098. மு.ப. 2018.
5. பாலசுப்பரமணியன் கு.மு. புறநானூறு, நியு செஞ்சுரி புக்ஹவுஸ்(பி) லிட், 41 பி சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், ஆம்பத்தூர், சென்னை - 600 098. மு.ப. 2018.


Acknowledgement Author Would Like To Thank The Management Of Nallamuthu Gounder Mahalingam College, Pollachi For Financial Assistance Through SEED MONEY Support.